உ

சிவமயம்



யாழ் உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும்
முகாவில் இயக்கச்சியில் வாழ்ந்து கிளிநொச்சி
தொண்டமான்நகரினை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் வைரமுத்து திருநாவுக்கரசு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

13.10.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# வைரமுத்து திருநாவுக்கரசு

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## நினைவுமலர்

2013.10.13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எமக்கெல்லாம் ஒளி தந்தாய்
உம் உழைப்பினால் பலருக்கு
வாழ்விற்கு வழி சொன்னாய்
பண்புக்கு இலக்கணமாய் எமக்கெல்லாம்
பாடம் செய்தாய்
அன்புத்தெய்வம் நீ எமக்கு
பிரார்த்தனை செய்வோம் என்றுமுனை
எம் தெய்வமே உன் திருவடிக்கமலத்திற்கு
இந்நூலை காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவாக...!

மண்ணில்
20
12
1935



விண்ணில்
13
09
2013

## அமரர் வைரமுத்து திருநாவுக்கரசு

### திதி நிர்ணய வெண்பா

விஜய வருட ஆவணி இருபத்தெட்டாம் நாள்
நவமி திதி வெள்ளிதனில்
அன்பான உருவம் திருநாவுக்கரசு அவர்கள்
தில்லைக்கூத்தன் திருவடியடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானே
காதலால் கூப்புவர் தம் கை

## தேவாரம்

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்
அதி குணம் நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நாள் மாற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஆரோடு நோகேனார்க் யார் கெடுத்துறைக்கே
ஆண்ட நீ அருள் நிலையானால்
வாக்கமடலுலகில் வாழ்கிலேன் கண்றாய்
வருக வெண்றருள் புரிவாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறிய மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
சென்றவர் புரங்கள் சென்ற எம் சிவனைத்
திருவழி மிழலை வீற்றிருந்த
கொற்றவர் தன்னை கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
பவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே (ல்)
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ யாடும் போதுன தடியின் கீழ் இருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக்கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வைரமுத்து திருநாவுக்கரசு அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையில் கட்டட ஒப்பந்தகாரராக வசித்து வந்த வைரமுத்து தில்லையம்மா தம்பதியினருக்கு நான்காவது மகனாக 1935.12.20 இம் மண்ணில் வந்துதித்தார். முதல் மூன்று அண்ணன்மார்களாகிய அமரர் வல்லிபுரம், அமரர் உதயகுமார், வேலாயுதம்பிள்ளை ஆகியோருடன் செல்லத்தம்பியாக வளர்ந்த இவர் யாழ்/சிதம்பராக்கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினை தொடர்ந்தார்.

கம்யூனிஷ்ட் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராக சிறுவயதிலிருந்தே காணப்பட்டார். கட்டடத்தொழிலை நன்கு பயின்ற இவர் பின்பு ஒரு கட்டட ஒப்பந்தகாரராக வேலைபார்த்து வந்தார்.

கம்பர்மலையை சேர்ந்த பொன்னம்மா என்பவரைத் திருமணம் செய்த இவர் செல்வராணி எனும் மகள் இவ்வுலகிற்கு வருமுன்னர் மணமுறிவு ஏற்பட்டு தனிமையாக சிலகாலம் வாழ்ந்து வந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல குளங்களோடும் எழில்மிகு வயல்களோடும் சிறுகாடுகள் நிறைய சிறப்புற அமைந்த முகாவில் கிராமத்தில் பார்வதியம்மன் அருள்பாலிக்க அவற்றோடு குலதெய்வமான சல்லியடிப்பிள்ளையார் அருளினைப் பெற்று ஆலமர விருட்சமாய் வாழ்ந்துவந்த சின்னக்குட்டி சின்னப்பிள்ளை தம்பதியினரின் ஆறாவது மகளான சரஸ்வதி என்பவரை திருமணம் செய்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் இனிதே தொடர விஷ்ணுகரன், அமரர் விஷ்ணுகாந்தன், அமரர் விஷ்ணுகஜன் என்னும் மூன்று புதல்வர்களை அன்புச் செல்வங்களாகப் பெற்றுக்கொண்ட இவர் வட்டக்கச்சியில் தனது கட்டட தொழிலைத் திறம்பட செய்து அவ்வூர் மக்களில் ஒருவராக அவ்வூர் மக்கள் போற்றும் வகையில் எல்லோருடைய மனங்களிலும் நீங்கா நினைவாய் நிலைத்திருந்தார்.

மிகவும் எளிமையான தோற்றமும் தான் இறக்கும் போதும் தன் உழைப்பில் வாழவேண்டும் என்ற எண்ணம் நிறைந்த இவரின் கடைசி இரு புதல்வர்களும் மண்ணுக்காய் வித்தாகினர். தன் மூத்த மகனை நிர்மலானந்தம் தங்கரத்தினம் தம்பதிகளின் மூத்த மகளான வித்தியாவிற்கு 2004ல் மணம் செய்து கொடுத்தார். வைஷ்ணவி, நிதுஜன், மகிஷா என மூன்று பேரப்பிள்ளைகளை கண்ட இவர் தனக்கு 78 வயதையடைந்தும் கட்டடத்தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் 2013.09.13 அன்று புகையிரதத்தால் மோதுண்டு இறையடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

அமைதியாய் நீயிருந்து எல்லோர்
அன்பையும் பெற்றிருந்தாய்
எளிமையாய் நீயிருந்து அனைவரையும்
உனைப்பற்றி பேசவைத்தாய்
உற்ற உறவோடு ஊரெல்லாம் கதறியழ
ஏன் எம்மைவிட்டு நீ போனாய்
முத்தப்பா எங்கேயென்று ஊர்கேட்டால்
வட்டக்கச்சிக்கு என்பேன் - ஆனால்
இப்போ என்னவென்று நான் சொல்வேன்
எப்படித்தான் நான் உரைப்பேன்
வெயாரிஸ் தாத்தாவென்று பேரப்பிள்ளைகள்
ஆசையாய் கேட்கும் போதெல்லாம்
தாத்தா இருக்கிறார் என்பேனெல்லோ
இனி என்ன தான் நான் சொல்வேன்
உனைப்பிரிந்த உன்பிள்ளைகளோடு
விண்ணகத்தில் நீயிருக்க சென்றாயோ..?
உன் மனைவி பிள்ளை இங்கிருக்க
தொலைதூரம் ஏன்போனாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் புலம்பல்

தொலைவில் நானிருந்தும் நினைவில்
உன்னருகில் நானிருந்தேன்
பார்த்து சில ஆண்டெனினும் – உன்
பார்வையில் நானிருந்தேன்
வாரமொருமுறையேனும் – உன்
சுகம் நானறிவேன்
காலனின் வருகையால் தொலைதூரம்
எம்மைவிட்டு ஏன்போனாய்
பாவியாய் எம்மையெல்லாம் பரிதவிக்க
பாரினில் ஏன்விட்டு போனாய்
அம்மா கண்ணீரோடு தனித்திருக்க – உன்
பேரப்பிள்ளைகள் உனையிழந்திருக்க
எம்மைவிட்டு ஏன் போனாய்
எம் குலவிளக்கே....

## மகள் புலம்பல்

தந்தையென நீ தரணியிலிருந்தும்
நாம் தனியே பிரிந்திருந்தோம்
காலனுனை அழைக்கும் நேரமறிந்தோ
உன் மனப்பாரமிறக்கி – நெடுதூர
வழி சொல்லிப் போக
என்னிடம் வந்தாயோ...?
விண்ணிற்கு நீ சென்றாலும்
மண்ணில் நாமிருக்கும் வரை
உன் நினைவுகள் என்றென்றும்
மனதினுள் நிலைத்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் புலம்பல்

காற்றோடு வந்த சேதி – எமை
கதறியழ வைத்ததுவோ
பெற்றோனை இழந்த உன்மகன்
பேதலித்து நிற்பது கண்டும்
பேரப்பிள்ளைகள் தாத்தாவை இழந்து
தவிப்பது கண்டும்
எப்படி ஆறுதல் சொல்வேன்
எம் குலவிளக்கே
தொலைதூரம் நீ போனதால்
தொலைந்து போனது எங்களின்பம்
விலைகொடுத்து வாங்கமுடியா சொத்தே
எம்மை பரிதவிக்கவிட்டு போனீரோ...?

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

*வெயாரிஸ் தாத்தா*
*வெயாரிஸ் தாத்தா வென்று*
*தொலைவிலிருந்து நாம் கேட்டோம் – இனி*
*எவ்வாறுதான் நாம் கேட்போம்*
*தாத்தா என்ன செய்கிறார் என்று*
*எப்படித்தான் நாம் கேட்போம்*
*சித்தப்பாக்களோடு சேர்ந்திருக்க*
*சீக்கிரமாய் ஏன் போனீர் தாத்தா*
*தாத்தா தாத்தா என்று – நாம்*
*அழைக்கும் குரல் கேட்க*
*தாத்தாவே நீயிங்கு இல்லையே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணி புலம்பல்

அன்பிற் குழைத்து
அறிவிற் பிசைந்து
இன்பம் கொடுத்து
இனிதாய் வழிநடத்தியவரே
துன்பம் கொடுத்து
சொல்லாமல் போகவந்த
வன்மம் தான் ஏதையா
வாய்திறந்து சொல்லையா

## அண்ணன் புலம்பல்

நால்வராய் பாரினில்
நாம் பிறந்தோம்
நலமே நாம் வளர்ந்தோம்
காலன் மூத்தவனை
அழைத்தபின்பும்
அன்போடு மூவராய் நாமிருந்தோம்
அண்ணன் அடுத்தவனும்
விண்ணிற்குப் போக
நாமிருவர் இங்கிருந்தோம்
அண்ணனை ஆறாத் துயராக்கி
தனியே விட்டுச் சென்றாயே - தம்பி
உன் பிரிவால் நான் படுதுயர்
விண்ணில் நீயறிவாயோ.?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறா மக்கள் புலம்பல்

அன்பையும் பண்பையும் பொழிந்த நீங்கள்
மண்ணை விட்டு போனதேனோ
பெறாது பெற்ற எம்முறவே
விண்ணிற்கு விரைந்ததேனோ...?
ஆறாது அழுகின்றோம். - நீ
தரணியில் எமக்காய்யில்லையென்று!

## மருமக்கள் புலம்பல்

பற்றுடனே நேசித்தீர் - பாரினில்
பறந்து எங்கு போனீர்
சுற்றம் உன்னை தேடியழ - ஏன்
காற்றோடு கலந்து போனீர்
மருகர் மருகியர்
மீளாத்துயரில் விழ - மாமாவே
எம்மையேன் மறந்து போனீர்

## மைத்துனர் மைத்துனிகள் புலம்பல்

எளிமையாய் நீயிருந்து - எமக்கெல்லாம்
வழி சொன்னாய்
அமைதியாய் நீயிருந்து - எம்
அன்பெல்லாம் பெற்றிருந்தாய்
பறிபோன எம் அம்மா சொத்தை
மீட்டுவர நீயுழைத்தாய்
சல்லியடியான் துணையிருக்க காலன்
எப்படி உன்னை கவர்ந்திழுத்தான்
பகைவர் எவருமின்றி எவருடனும்
பற்றுடன் நீர் இருந்தீர்
சகோதரியை தனியேவிட்டு தான்
விண்ணிற்கு போனதேனோ..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

மலர்வு

20

12

1935



உதிர்வு

13

09

2013

அமரர்

## வைரமுத்து திருநாவுக்கரசு

தொண்டமான்நகர் கிழக்கு,
(முகாவில், இயக்கச்சி.)

அன்புக்கு இலக்கணமாய் அறிவுக்கு
அகல் விளக்காய்
பக்திக்கு இருப்பிடமாய் பாசத்தின்
ஒளி விளக்காய்
எமை அரவணைத்து ஏணியாய் தாங்கிய
எங்களின் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுகளை நிதம் நிதம்
நெஞ்சில் நினைத்து கண்ணீர்
சொரிவதைத் தவிர
எம்மால் எதுவும் செய்ய முடியவில்லையே ஐயா!
உங்களுக்காய் நாம் உள்ளத்தில் ஏற்றி வைத்த
நினைவின் ஒளி தீபமாய்
மண்ணோடு நாம் வாழும் காலம் வரை
ஒளி வீசிக்கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தி. சிவகுருநாதன் (சிவம்) குடும்பம்
முகாவில், இயக்கச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 |  | 13 |
| 12 | | 09 |
| 1935 | | 2013 |

இல25, 156ம் கட்டை, தொண்டமான்நகர், கிளிநொச்சியை
வதிவிடமாகக் கொண்ட

அமரர்

## வைரமுத்து திருநாவுக்கரசு (முத்துலிங்கம்)

இரு விழி மூடியதால் பல விழிகள்
ஈரத்தால் நனைகின்றன
எங்கள் கண்ணீர்ப்பூக்களை
காணிக்கையாகச் செலுத்துகின்றோம்
இனிய பொழுதில் காலனவன் செய்த
செயலால் எம்மையெல்லாம் கலங்க
வைத்துப் போனதேன்
கடமை எல்லாம் முடிந்ததென்றா
காலன் உங்களைக் கவர்தெடுத்து எம்மைக்
கண்ணீரில் மூழ்க விட்டான்
அன்பையும் பண்பையும் பொழிந்த நீங்கள்
ஒரு நொடியில் பிரிந்தது ஏன்?
உங்களின் நினைவலைகளைச் சுமந்து
நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பேராமக்கள்*
*பரராசசிங்கம் குடும்பம்*
*முகாவில், இயக்கச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சி மக்கள் புலம்பல்

உற்ற உறவு போல
உயிர் நண்பன் போல
வட்டக்கச்சி மண்ணறிந்த
பண்புமிக்கவரே
கட்டிடங்கள் பல இங்கு கட்டி
கடைசிவரை உழைத்து நின்றாய்
கட்டிடங்கள் நாளை அழிந்து போகலாம் – ஆனால்
உன் நினைவுகள் எம்மில் அழியுமோ
விண்ணிற்கு நீ சென்ற செய்திகேட்டு
எம் தெருக்கலெல்லாம் உனை தேடியலைகின்றன
கண்ணீரோடு நாம் கதறியழ – இம்
மண்ணைவிட்டு போக மனமேது
"முத்தப்பா" என்ற பெயரை நாம் வைத்தோம் – அது
எங்கள் சொத்தாக வேண்டுமென்று
ஊரே கத்தியழ உறவும் கட்டியழ
முத்தப்பா நீ உறங்கியதேனோ...?

## தொண்டமான்நகர் மக்கள் புலம்பல்

அயலே உன்னை இங்கு தேடியழ
அமைதியாய் எங்கு போனாய்
உற்ற உறவுகளாய் ஊரிருக்க - ஏன்
மீளாத்துயில் கொண்டாய்
இறுதிவரை உழைத்து வாழ்வேன் என்று
கடைசிவரை சொன்னவரே
"முத்தப்பா" என்ற எளிமை - விபத்தாகி
விண்ணிற்கு ஏகியதேனோ..?
காலனுனை அழைத்த செய்தி - எம்மை
கண்ணீரோடு கதை சொல்ல வைக்கின்றதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**பெறாது பெற்றாய் எம்மை**
**ஆறாத்துயராச்சு எந்நாளும் எமக்கு**

ஆல விருட்சமாய்
அனைவருக்கும் ஆதாரமாய்
காலமெல்லாம் அரவணைத்து
நினைவதில் எம்மை சுமந்தீரே
சீலமுள்ளவரை எம் சிந்தைதனில்
அணையா விளக்கானாய் அன்புருவே!

இனிய மனத்தோப்பில்
கனிவு நிழலதனால்
காப்பாய் இணைப்பாய் இருந்த
எம் தந்தையின் தம்பியே
தாயன்புதனையும் தந்தீரே
தாங்குமோ உன் பிரிவால் எம் மனம்!

பெறாது பெற்றாய் எம்மை
பெரும் பேறாய் பெற்றோம் உம்மை
நீறாகிப் போனாலும்
நிழலாய் நின்ற நீங்கள்
கனலாக எரியும் எம்மனதில்
காலத்தால் அழியாது அமர்ந்தீரே!

கடுகதி யாழ்தேவியில்
காலனவன் அழைத்தான் உம்மை
சிதறியதோ உம் தேகம்
காலமெல்லாம் ஆன்மா சாந்திபெற
நாளும் சிவனடி வேண்டியே
தொழுவோம் நாம் நிதமே!



பெறாமக்கள் / மருமக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நீதிக்கதைகள்

எத்தனை நாள்களுக்குத்தான் கட்டுரை, பத்தி என்ற பெயர்களில் வாசகர்களை வதைக்க முடியும். ஏற்கனவே தேர்தல் திருவிழா தொடங்கி உச்சக்கட்டத்தை எட்டியிருக்கும் இந்த நாள்களில், வேட்பாளர்களின் அனல் பறக்கும் வசனங்கள், வாக்குறுதிகள், அறிக்கைகள், விளம்பரங்கள் என்று எல்லாவற்றையும் கேட்டும், பார்த்தும் சலித்துப்போயிருக்கும் வாசகர்களுக்கு சின்னதொரு ஆறுதலுக்காக சில கதைகளும் அவற்றின் மூலம் வெளிப்படும் நீதிக்கருத்துக்களும் மட்டும் இங்கே பகிரப்படுகின்றன.

**பயணம் -01**

முத்தப்பாவுக்கு காட்டில் எல்லாப்பாதைகளும் அத்துப்படி. 70 வயதென்றாலும் ஆள் இப்போதும் கம்பீரத்தோடுதான். ஒரு கொஞ்ச நேரமும் சும்மாயிருக்க ஆளுக்குப் பிடிக்காது, ஏதாவது செய்து கொண்டேயிருப்பார். தன்னைப்பற்றிய சுயநம்பிக்கை எப்போதும் முத்தப்பாவுக்கு அதிகம்.

"இஞ்ச எனக்குத்தெரியாமல் ஒரு இடமும் இல்லை. கண்ணை மூடிக்கொண்டு எங்கையும் போய் வருவன். கண் தெரியாட்டியும் காலுக்கு எல்லாம் பழகிட்டு. தன்பாட்டில அது போய் வரும்" என்று சொல்லும் முத்தப்பா, வன்னியின் காலநிலையையும் தன் அனுபவத்தால் கரைத்துக் குடித்து வைத்திருந்தார்.

"இண்டைக்குப் பின்னேரம் மழை பெய்யும் பார்" என்று வானைப் பார்த்து, நெற்றியைச் சுருக்கியபடி சொன்னாரென்றால், கட்டாயம் மழை பொழிந்தே தீரும். அந்தளவுக்கு தன் ஊரின் சின்ன அசைவுகளும் அவருக்கு அத்துப்படி. போர் அவரை அலைக்கழித்து, அவரின் பொருள்களையும், உறவினர்களையும் தின்றிருந்தாலும், முத்தப்பா இன்னும் அசைந்து கொடுக்காத மனிதராகவே இருந்தார்.

அன்றைக்கும் வழமை போலவே முத்தப்பாவுக்கு விடிந்தது, வீதியில் அரக்கப்பரக்க வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்ததால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாகத் தான் பயன்படுத்தும் குறுக்குப்பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

இன்னும் கொஞ்சத்தூரம் தான் இருந்தது.

குறுக்கே ரயில் தண்டவாளம். பாதுகாப்புக் கடவைகள் இல்லை. சமிக்ஞை விளக்கு இல்லை. ஒரு காவல் கூட இல்லை. "இப்ப எங்க ரெயில் வரப்போகுது?" பழக்க தோசத்தில் அதைக் கடக்க அவரது கால் தானாகவே நகர்ந்தது.

"சடீர்ர்ர்ர்ர்ர்ர்........................"

ஒரு நொடி அவகாசம் கூட இல்லை. இறைச்சிக் குவியலாகத் தூக்கி எறியப்பட்டார் முத்தப்பா. அவரை அடித்து விட்டு எந்தச் சலனமும் இன்றி, எந்தக் கவலையுமின்றி தன்பாட்டுக்கு விரைந்து கொண்டிருந்தது "யாழ்தேவி" கடுகதி ரயில். வெற்றிகரமாக தன் பரீட்சார்த்த பயணத்தை நிறைவு செய்த யாழ்தேவிக்கு, முத்தப்பாவின் குருதியால் நெற்றித்திலகமிடப்பட்டிருந்தது. கரகோஷம் வானைப் பிளந்திருந்தது. தூரத்தே கண்ணை மூடிக்கொண்டே போய்வரக் கூடியவரும், வானைப் பார்த்தே மழை வருமா இல்லையா என்பதை உய்த்துணரக் கூடியவருமான முத்தப்பா, கடுகதி ரயில் வரப் போவதை அறியமுடியாததால் தலை சிதைந்து கிடந்தார்.

**நீதி:** யாழ்தேவி எப்போ, எப்பிடி வருமென்று தெரியாது. ஆனால் தேர்தல் நேரத்தில் கட்டாயம் வந்தே தீரும். கவனம் மக்களே

***பயணம் :-02***

மாட்சிமை தாங்கிய மாமன்னர் வரவிருந்தார். வழக்கமாக அவர் புஷ்பகவிமானத்திலேயே வருவது வழமை. அவற்றுக்கு தேர்தல் காலத்தில் நிறைய வேலைகள். அத்தோடு நாட்டில் உள்ள கோயில் திருவிழாக்களுக்கு பூமாரி பொழிவது தான் அந்தப் புஷ்பக விமானங்களின் பிரதான பணியாக மாறிப் போயிருக்கும் காலத்தில், மாமன்னரும் புஷ்பகவிமானத்தில் வந்தாலும் யாரேனும் அவரும் பூமாரி பொழியத்தான் வருகிறாரோ என்று தவறாகவும் நினைத்துவிடக்கூடும். அதனால் ஏதாவது புதுவாகனத்தில் செல்ல மாமன்னர் முடிவெடுத்திருந்தார். போகாமலும் இருக்க முடியாது. அவர் நாட்டின் ஒரு பகுதியில் தேர்தல் நடக்கும் போது அவர் பரப்புரைக்கு போகத்தானே வேண்டும். இல்லாவிட்டால், நாங்கள் வென்றால் நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைச் செய்வோம், இதைச்செய்வோம், அந்தளவுக்கு எங்களுக்கும் ஜனாதிபதிக்கும் அப்படி ஒரு நெருக்கம் என்று சொல்லித்திரியும் அரசதரப்பினரின் கௌரவம் என்னாவது? தேர்தல் காலத்திலேயே வராத அரசரா, அதற்குப்பின் இங்கு வந்து ஊர் முழுதும் பொன்னும் பொருளும் வாரியிறைக்கப் போகிறார் என்று மக்கள் எண்ணத் தொடங்கிவிடுவர். ஆகவே தமக்கு விழப்போகும் அற்ப சொற்ப வாக்குகளையாவது இழக்காமல் இருக்க மாமன்னரின் வருகை அவசியமானது.

எனவே தான் மாமன்னர் இந்தமுறை இயந்திரப்பாம்பில் வரஏற்பாடாகிற்று. பாம்பு பயணிப்பதற்கான பாதைகள் ஏற்கனவே போடப்பட்டுக் கொண்டிருந்தன. மாமன்னரின் வருகையால் அந்தப்பணிகள் துரிதமடைந்தன. இதோ! மன்னரின் வருகை நிகழ்ந்தே விட்டது. போரின் வடுக்களை கம்பளப்பாதைக்குள் மறைத்து நிற்கும் நகரில், தன் உற்றம் சுற்றம் மற்றும் அல்லக்கை, நொள்ளைக்கைகள் புடைசூழ, தன் குரக்கன் வர்ணச்சால்வையை கழுத்தில் அணிந்தபடி கால் பதித்தார் மாமன்னர். இப்போதும் வான் பிளக்கும் கரகோஷம்.

"மக்களே! நாட்டில் ஓடிய இரத்த ஆற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்த எங்களுக்கே உங்கள் வாக்குகளை வழங்க வேண்டும்..."

இரத்தத்தை நினைவூட்டும் சால்வை காற்றில் படபடக்க மாமன்னர் சொன்ன ஒவ்வொரு சொல்லுக்கும் கைதட்டல் எழுந்தபடியே இருந்தது.

மாமன்னர் சொல்வதுவும் உண்மைதான்.

முதல் நாள் அடிபட்ட முத்தப்பாவின் இரத்தம். அவர் வந்திறங்கிய இரும்புப்பாம்பின் முகத்தில் முற்றுப் புள்ளி போலத் தான் தெறித்திருந்தது. இன்னும் இரத்தம் குடிக்கும் ஆசையில் இரும்புப் பாம்பு நாவைச் சப்புக் கொட்டிக்கொண்டிருந்தது.

**நீதி: ஆபத்துக்கு பாவமில்லை**

**(அரசரின் அவசர வருகைக்காக முத்தப்பா மரணித்தது பாவமேயில்லையாம்)**

(வார இதழான சுடரொளி பத்திரிகையில் (18- 24) அன்று வெளியான செய்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
   புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
   ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
   எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
   சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண்வயல்சூழ்
   திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
   ஏற்றுயர்க் கொடியுடையாய் எனை யுடையாய்
   எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

2. அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
   அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
   கருணையின் சூரியன் எழஎழ நயனக்
   கடிமலர் மலரமற்றண்ணல் அங்கண்ணாம்
   திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
   திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
   அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
   அலைகடலே பள்ளி எழுந்தருளாயே.

3. கூவின பூங்குயில் கூவினகோழி
   குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
   ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
   ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
   தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
   திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
   யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்
   எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

5. பூதங்கள் தோறும்நின்றாயெனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

6. பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

7. அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர்ப் பொழில்திருவுத்தர கோச
மங்கையுள்ளாய் திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறுஅது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும் நின்னடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டி வந்தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே.

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டார்
விழுப்பொருளே உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச்செய்தானே
வண்திருப் பெருந்துறையாய் வழியடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும் படியார்
எண்ணகத்தாய் உலகுக் குயிரானாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே.

10. புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின்அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெம்மை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

3. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏலோர் எம்பாவாய்

4. ஒள்நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயில் ஏலோர் எம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்

6. மானேநீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றாலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய்திறவாய்
ஊனே உருசாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்

7. அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏலோர் எம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின் ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்.
இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏது அவனைப் பாடும்பரிசு ஏலோர் எம்பாவாய்

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை ஏலோர் எம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப்பொருள் பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

15. ஓரொருகால் எப்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையர்க்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

16. முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தெம்னக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
எங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய்

18. அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றால்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலோரெம்பாவாய்

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏலோர் எம்பாவாய்

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

1. முத்து நல்தாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

2. பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகிரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எங்கூத்தன்
தேவியும் தானும்வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்துநாமே.

3. சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.

4. காசணி மின்கள் உலக்கை எல்லாம்
காம்பணி மின்கள் கறை உரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்தாடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற் பின்பல்லது எடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவல் செய் வாயினீர் முக்கணப்பதற்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

6. உலக்கை பல ஓச்சுவார் பெரியர்
உலக மெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே.

7. சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடகமாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

8. வாள் தடங்கண் மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்ப வன் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைத்திலங்கச்
சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண் மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

10. முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

11. மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந்து அம்பவளம் துடிப்ப
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

12. மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வலகுல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடையக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம்ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

14. சங்கம் அரற்றச் சிலம்பு ஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாட
செங்கனி வாயிதழும் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே.

15. ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத்து ஆண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப்
பானல் தடக்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

16. ஆவகை நாமும்வந்து அன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகமான நஞ்சுண்டல் பாடிப்
பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே.

18. அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்று உரிபோர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்டே
நயந்தனைப் பாடி நின்றாடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

19. வட்ட மலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியமும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடிச்
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

20. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமுமாய் விடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க

சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி

சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்

செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த

மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை

மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்த மெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப

ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் ஞானம்

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே!

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளுக்கு
சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல, தேசத்திலே
யாருஞ் சதமல்ல, நின்றாள் சதங்கச்சி யேகம்பனே!

## பட்டினத்துப் பிள்ளையார் பாடல்
## திரு ஏகம்பம்

எத்தனை ஊர் எத்தனைவீடு எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டு அழைக்க ஏன் என்றேன் - நித்தம்
எனக்குக் களை ஆற்றாய் ஏம்பா கம்பா
உனக்குத் திருவிளையாடலோ.

## திருக்குற்றலாம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலஉண் கடைவாய் படும் முன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலந் தானையே கூறு.

## பொது


விட்டுவிடப் போகுது உயிர் விட்டஉடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு
எந்நேரமும் சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்.

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாம் படையாதே - மேவியசீர்
வித்தார மும்கடம்பும் வேண்டாம்மட நெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையடி சாஸ்திரம்

## அஷ்ட திக்கு பாலகர்கள்




### அஷ்ட திக்கு பாலகர் துதி

இரு நான்கு திக்குப் பாலர்
ஈசான்ய, குபேர போற்றி
அருள்மிகு இந்திர போற்றி
அக்கினி பகவான் போற்றி
தருமவான் யமனே போற்றி
சற்குண நிருதி போற்றி
வருணனே போற்றிக் காக்கும்
வாயுவே போற்றி போற்றி!!

வீடுகட்ட விதிமுறைகள்
அனுசரிக்க வேண்டிய விதிகள்:

1. மனையின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் வீட்டைக்கட்டி, வடக்கிலும், கிழக்கிலும் காலியிடம் இருத்தல் நல்லது.

2. நிருதி மூலையில் காலியிடம் குறைவாக இருந்தால் நலம் பயக்கும்.

3. தெரு வாசற்படியைவிட வீட்டு வாசற்படி உயர்ந்து இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4. மாடிப்படிகள் கட்டும்போது, கிழக்கிலிருந்து மேற்காகவோ, வடக்கிலிருந்து தெற்காகவோ ஏறும்படி கட்ட வேண்டும்.

5. வீட்டுக்கு வெளியே மாடிப்படி கட்டும்போது, வெளி சுவற்றை ஒட்டிக் கட்டலாம். வீட்டுக்கு உள்ளே மாடிப்படி கட்டுவதானால், உள்சுவற்றுக்கு சற்று இடைவெளிவிட்டு படி அமைப்பது நல்லது.

6. மனைக்கு தெற்கேயும், மேற்கேயும் பெயர்த்துக் கட்டக்கூடாது. கிழக்கிலும் வடக்கிலும் பெயர்த்துக் கட்டலாம்.

7. வாயிற்படிக்கு எதிராக கட்டைச் சுவர் இருக்கக் கூடாது.

8. வாயிற்படிகளுக்கும், சாளரங்களுக்கும் எதிரே சுவரோ, வாசற்படியோ சாளரமோ எதிர்க்குத்தாக இருக்கக் கூடாது. வீட்டின் உத்தரம் (தூலம்) குத்து ஆகாது.

9. தெற்குப் புறம் தாழ்வாரம் கட்டினால் நிருதி மூலையில் அறையை அமைக்கலாம். வாயிற்படி கிழக்கு நோக்கி அமைக்க வேண்டும். அக்கினி மூலையில் அறையைக் கட்டினால் வடக்கு நோக்கி வாயிற்படி இருக்க வேண்டும்.

10. கிழக்குப்புறம் தாழ்வாரம் கட்டினால் அக்கினி மூலையில் அறையை அமைத்து வடக்கு நோக்கி வாயிற்படி கட்ட வேண்டும்.

## சுராவின் வாஸ்து சாஸ்திரம்

11. மேற்குப் புற தாழ்வாரத்திற்கு நிருதி மூலையில் அறையைக் கட்டி வடக்குப் பார்த்த வாயிற்படி வைக்க வேண்டும்.

12. வடக்குப்புற தாழ்வாரம் கட்டினால் வாயு மூலையில் அறையை அமைத்து கிழக்குப் பார்த்த வாயிற்படி வைக்கலாம்.

13. ஈசான்ய மூலையில் அறை நிச்சயமாக அமைக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராசிக்கு ஏற்ற வீடு

1. கடகம், விருச்சிகம், மீனம் ராசிகளில் பிறந்தவர்களுக்கு கிழக்குப் பார்த்த வீடு உத்தமம்.

2. ரிஷபம், கன்னி, மகரம் ராசியில் பிறந்தவர்களுக்கு தெற்குப் பார்த்த வீடு உத்தமம்.

3. மிதுனம், துலாம், கும்பம் ராசிகளில் பிறந்தவர்களுக்கு மேற்குப் பார்த்த வீடு உத்தமம்.

4. மேஷம், சிம்மம், தனுசு ராசிகளில் பிறந்தவர்களுக்கு வடக்குப் பார்த்த வீடு உத்தமம்.

## வீட்டின் பகுதிகள்


| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | 1 |
| 9 | 16 | 13 | 2 |
| 8 | 15 | 14 | 3 |
| 7 | 6 | 5 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஈசான்ய பகுதி
4. அக்னி பகுதி
7. நிருதிப் பகுதி
10. வாயு பகுதி
13. வடகிழக்கு
15. தென்மேற்கு பகுதி

2 & 3 கிழக்கு பகுதி
5 & 6 தெற்குப் பகுதி
8 & 9 மேற்கு பகுதி
11 & 12 வடக்கு பகுதி
14. தென்கிழக்கு பகுதி
16. வடமேற்கு பகுதி

## வீட்டின் அமைப்பு




1. சாத்திரப்படி கீழ்க்கண்டவாறு வீடு கட்டினால் அந்த அமைப்பு, சீரும் சிறப்பும் தரும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கிழக்கு | - | குளியல் அறை |
| 2. | மேற்கு | - | உணவுக்கூடம் |
| 3. | வடக்கு | - | தன, தானிய அறை |
| 4. | தெற்கு | - | படுக்கை அறை |
| 5. | அக்னி மூலை (தென் கிழக்கு) | - | சமையலறை |
| 6. | நிருதி மூலை (தென் மேற்கு) | - | படிக்கும் அறை |
| 7. | வாயு மூலை (வடமேற்கு) | - | பசுந்தொழுவம் |
| 8. | ஈசான்ய மூலை (வடகிழக்கு) | - | பூஜையறை |

இது ராஜ யோகம் தரும் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதை எங்கே அமைப்பது


ஒரு மனையியல் வீடு கட்டும் போது அம்மனையில் ஒவ்வொரு பகுதியையும் எது எதற்குப் பயன்படுத்த வேண்டும் என மூத்தோர் வகைப்படுத்தி உள்ளனர். வசதியை விட சாத்திர வழிமுறையே வாழ்வில் உயர்வைத் தரும் என்பதால் சாஸ்திர ரீதியாக எதை எங்கு அமைக்க வேண்டுமோ அதை அங்கு அமைப்பதே ஆனந்த வாழ்வுக்கு அடிப்படையாக அமையும்.

ஒருவர் வீடு கட்டும் மனையில் (அதாவது) வீடு கட்டிய பகுதி அல்லது குடிசை வேய்ந்த பகுதி போக எஞ்சி வியாபித்திருக்கும் பகுதியில்)

1. தெற்குத் திக்கில் – குப்பை கொட்டி சேகரிப்பதற்கும்,
2. தென்மேற்கு மூலையில் – வைக்கோல் போர் இடவும்
3. மேற்கே – எருமைக் கொட்டில் அமைக்கவும்
4. வடமேற்கு மூலையில் – பசுந் தொழுவம் கட்டவும் உத்தமம்.
5. தானிய சேமிப்பு கிடங்கு நிறுவவும்.
6. ஒரு சிலர் வீட்டிற்கு வெளியே அடுக்களை அமைத்துக் கொள்வது உண்டு. அத்தகையவர் வடகிழக்குப் பகுதியில் அடுக்களை அமைப்பது உத்தமம்.
7. தென் கிழக்கே வரவு, செலவு, கொடுக்கல், வாங்கல் செய்வதற்கான அறை அமைக்கலாம்.
8. கிழக்கு திக்கை ஆட்டு மந்தைக்கு உரியதாக ஒருக்கலாம்.

மேற்கூறிய யாவும் பெரிய அளவிலோ அல்லது சிறிய குடிசை வேய்ந்தோ பண்ணை வீடு கட்டுவோர்க்குப் பொருந்தும்.

கீழே உள்ள படம் அது அது அமைய வேண்டிய திக்கைக் காட்டுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்ஙனமின்றி, சிறிய அளவில் வீடு கட்டி வாழும் அமைப்புடையோர்

| | | | |
|---|---|---|---|
| 1. | தென்கிழக்கில் | - | சமையல் அறையும் |
| 2. | மேற்கில் | - | படுக்கை அறையும் பூஜை அறையும் |
| 3. | கிழக்கில் | - | குளியல் அறையும் |
| 4. | தென்மேற்கில் | - | புத்தக அறையும் |
| 5. | தெற்கில் | - | உணவு அருந்தும் அறையும் |
| 6. | வடக்கில் | - | தானிய சேமிப்பறையும். |
| 7. | வடகிழக்கில் | - | பூஜை அறையும், சயன அறையும் |
| 8. | வடமேற்கில் | - | அலுவலக அறையும் |

## கிணறு நிறுவ வேண்டிய இடமும் அளவு முறைகளும்

மனையின் கிழக்குப் பகுதியில் கிணறு எடுப்பின் யோகாதி யோகம் பெற்று உயர்வடைவர்.

மனைக்கு மேற்குப் பகுதியில் கிணறு எடுப்பின் குற்றமில்லை.
மனையின் வடக்குப் பகுதியில் கிணறு எடுப்பின், வளம் கூடும்.
மனையின் தெற்குப் பகுதியில் கிணறு எடுப்பின், நீரால் கண்டங்கள் உண்டாகும்.
தென்மேற்குப் பகுதியில் கிணறு அமைப்பின்,பிணிகளால் பீடிக்க நேரும்.
தென்கிழக்குப் பகுதியில் கிணறு அமைப்பின், கீர்த்தி பாழடையும்.

என்றாலும் கூடுமானவரை மனையின் கிழக்குப் பகுதி அல்லது மேற்குப் பகுதியிலேயே கிணறு தோண்ட வேண்டும். இங்ஙனம் அமைக்கப்படும் கிணறுகளே நீண்டநாள் நிலைத்து நிற்கும். கிணற்றுக்கு உரியவரும் சீரோடும் சிறப்போடும் வாழ்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணறு வெட்ட அளவு முறைகள்

4 அடி விட்டத்திற்கு 12 அடி ஆழம்
5அடி விட்டத்திற்கு 15 அடி ஆழம்
6 அடி விட்டத்திற்கு 18 அடி ஆழம்
7 அடி விட்டத்திற்கு 21 அடி ஆழம்
8அடி விட்டத்திற்கு 24 அடி ஆழம்
9 அடி விட்டத்திற்கு 27 அடி ஆழம்

## கிணறு வெட்ட கரை அமைக்க ஏற்ற நாள்

நட்சத்திரம் :-உத்திரம், கேட்டை, ரேவதி, சித்திரை, அஸ்தம், மிருகசீரிடம், பூராடம், மகம் ஆகியவை உகந்த நட்சத்திரங்களாகும்.

திகதிகள்: பஞ்சமி சப்தமி, திரிதியை, ஏகாதசி, திரயோதசி, பிரதமை ஆகியவை உகந்த திதிகளாகும்.

லக்னம் :- கும்பம், மீனம், மகரம், ரிஷபம், கடகம் ஆகியவை உகந்த லக்னங்களாகும்.

ஆக மேலே கூறிய சுப நட்சத்திரம், திதி, லக்னம், கூடிய நாட்களில் கிணறு வெட்டத் தொடங்குவதால் சுவையான நீரும், நல்ல ஊற்றுக் கண்களுடன் நிறைந்த அளவு நீரும் கிடைக்கும்.

பொதுவாக கிணறு வெட்டுவதற்கு ஐப்பசி மாத நடுமத்தியை பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்ப சாஸ்திரப்படி முழக்கோல் அளவு முறைகள்

| | |
|---|---|
| 8 அணு கொண்டது | 1 புல் நுனி |
| 8 புல் நுனி கொண்டது | 1 நுண் மணல் |
| 8 நூல் மணல் கொண்டது | 1எள் |
| 8 எள் கொண்டது | 1 நெல் |
| 8 நெல் கொண்டது | 1 துவரை |
| 8 துவரை கொண்டது | 1 விரல் |
| 6 விரல் கொண்டது | 1 காலடி |
| 4காலடி கொண்டது | 1 தச்சு முழம் |

இதன்படி

27 விரல் அளவு கொண்டது ஒரு முழம் (தனுக்கிரகம்)
இது பிராமண வருணத்திற்கு உரியது.

26 விரல் அளவு கொண்டது ஒரு முழம் (தனுர் முஷ்டி)
இது சாஷ்திரியர்ளுக்கு உரியது.

25 விரல் அளவு கொண்டது ஒரு முழம் (பிராஜாபத்தியம்)
இது வைசியர்களுக்கு உரியது.

34 விரல் அளவு கொண்டது ஒரு முழம். (தேவாங்குசம்)
இது ஆலய நிர்மாணத்திற்கு உரியது

## முழக்கோல் அமைக்கும் விதி

மேற்கூறிய அளவு கொண்டு
ஆலய நிர்மாணத்திற்கு இரும்பால் செய்த முழக்கோல் பயன்படுத்த வேண்டும்.

அந்தணர்களுக்கு மூங்கிலால் செய்த முழக்கோல் பயன்படுத்த வேண்டும்.

சாஷ்திரியர்களுக்கு ஆச்சா மரத்தினால் செய்த முழக்கோல் பயன்படுத்த வேண்டும்.

வைசியர்களுக்கு வேங்கை மரத்தினால் செய்த முழக்கோல் பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற வருணத்தார்க்குத் தேக்கினால் செய்த முழக்கோல் பயன்படுத்த வேண்டும்.

இந்த முறை பெரும்பாலும் தற்போது நடைமுறையில் இல்லை எனலாம். எல்லோருக்கும் பொதுவாக இஞ்சுடேப்பையே இப்போது பயன்படுத்துகின்றனர். கால மாறுதலுக்கு ஏற்ப இதை ஏற்றுக் கொள்ளலாம்.

## வீடுகளின் அளவு முறைகள்

வீடுகள் பொதுவாக பல்வேறு அமைப்புடனும் அளவுடனும் கட்டப்பட்டாலும் சிற்ப சாஸ்திரப்படி கீழ்க்காணும் 6 வகையாகவும், அந்த 6 வகைக்கு உட்பட்ட ஐந்துவித அளவு முறைகளைக் கையாண்டும் கட்டுவதே சிறப்பெனலாம்.

## முதல்தர வீடுகள்

முதல் வகை

| | |
|---|---|
| அகலம் - 162 அடி | அகலம் 108 முழம் |
| நீளம் - 202 1/2 அடி | அல்லது 135 முழம் |

இரண்டாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 150 அடி | அகலம் 100 முழம் |
| நீளம் - 187 1/2 அடி | அல்லது 125 முழம் |

மூன்றாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 138 அடி | அகலம் 92 முழம் |
| நீளம் - 172 1/2 அடி | அல்லது 115முழம் |

நான்காம் வகை

| | |
|---|---|
| அகலம் - 138 அடி | அகலம் 84முழம் |
| நீளம் - 172 1/2 அடி | அல்லது 105 முழம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
**பிறந்து பாரென இறைவன் பணித்தான்**

படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
**படித்துப் பாரென இறைவன் பணித்தான்**

அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
**அறிந்து பாரென இறைவன் பணித்தான்**

அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
**அளித்துப் பாரென இறைவன் பணித்தான்**

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
**பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்**

மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
**மணந்து பாரென இறைவன் பணித்தான்**

வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
**வாடிப் பாரென இறைவன் பணித்தான்**

இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
**இறந்து பாரென இறைவன் பணித்தான்**

**அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்**
**ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்**
**ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி**
**அனுபவம் என்பதே நான் தான் என்றார்.**

-கவிஞர் கண்ணதாசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்



தோற்றம்
20
12
1935

மறைவு
13
09
2013

அமரர்

## வைரமுத்து திருநாவுக்கரசு (முத்தப்பா)

இல-25, தொண்டமான்நகர் கிழக்கு, கிளிநொச்சி.

**முத்தான எம் தாத்தா**
**முத்தப்பா, உங்களை**
**நீள்வண்டி ஒத்திகை**
**நின் வாழ்வை முடித்ததா...?**
**"பாரினில் நீ நீங்க – பகை**
**புகைவண்டி வந்ததா"?**

**நம் வாழ்வின் சிறப்பிற்காய்**
**இரு மகவை ஈந்தவனே**
**திருமுறிகண்டி கபளீகரத்திற்கு**
**எதிரான அகிம்சையிலும்**
**அணி சேர்ந்தாய்**
**பலியெடுக்க யாரும் – பயனிலை என்றா**
**உன் வாழ்வை ஈந்தாய்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் வகை

| | |
|---|---|
| அகலம் – 114 அடி | அகலம் 76 முழம் |
| நீளம் – 142 1/2 அடி | அல்லது 95 முழம் |

## இரண்டாம் தர வீடுகள்

முதல் வகை

| | |
|---|---|
| அகலம் – 96 அடி | அகலம் 64 முழம் |
| நீளம் – 132 அடி | அல்லது 88 முழம் |

இரண்டாம் வகை

| | |
|---|---|
| அகலம் – 87அடி | அல்லது 58 முழம் |
| நீளம் – 119 அடி | அல்லது 79 3/4 முழம் |

மூன்றாம் வகை

| | |
|---|---|
| அகலம் – 78 அடி | அல்லது 58 முழம் |
| நீளம் – 107 1/4 அடி | அல்லது 79 3/4 முழம் |

நான்காம் வகை

| | |
|---|---|
| அகலம் –69 அடி | அல்லது 46முழம் |
| நீளம் – 94 1/8 அடி | அல்லது 63 1/4 முழம் |

ஐந்தாம் வகை

| | |
|---|---|
| அகலம் – 60 அடி | அல்லது 46 முழம் |
| நீளம் – 82 1/2 அடி | அல்லது 55 முழம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் தர வீடுகள்

முதல் வகை

அகலம் - 96 அடி அல்லது 94 முழம்
நீளம் - 108 அடி அல்லது 72 முழம்

இரண்டாம் வகை

அகலம் - 84 அடி அல்லது 96 முழம்
நீளம் - 94 1/2 அடி அல்லது 63 முழம்

மூன்றாம் வகை

அகலம் - 78 அடி அல்லது 52 முழம்
நீளம் - 87 3/4 அடி அல்லது 58 1/2 முழம்

நான்காம் வகை

அகலம் -72 அடி அல்லது 48முழம்
நீளம் - 81 அடி அல்லது 54 முழம்

ஐந்தாம் வகை

அகலம் - 66 அடி அல்லது44 முழம்
நீளம் - 74 1/2 அடி அல்லது 49 1/2 முழம்

## நான்காம் தர வீடுகள்

முதல் வகை

அகலம் - 45 அடி அல்லது 30 முழம்
நீளம் - 47 13/16 அடி அல்லது 31 7/8 முழம்

இரண்டாம் வகை

அகலம் - 42 அடி அல்லது 28 முழம்
நீளம் - 44 5/8 அடி அல்லது 29 3/4 முழம்

மூன்றாம் வகை

அகலம் - 39 அடி அல்லது 26 முழம்
நீளம் - 41 2/16 அடி அல்லது 27 5/8 முழம்

நான்காம் வகை

அகலம் -36 அடி அல்லது 24முழம்
நீளம் - 38 1/4 அடி அல்லது 25 1/2 முழம்

ஐந்தாம் வகை

அகலம் - 33 அடி அல்லது 22 முழம்
நீளம் - 35 1/16 அடி அல்லது 23 3/8 முழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் தர வீடுகள்

முதல் வகை

| | |
|---|---|
| அகலம் - 120 அடி | அல்லது 80 முழம் |
| நீளம் - 160அடி | அல்லது 106 2/3 முழம் |

இரண்டாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 111 அடி | அல்லது 74 முழம் |
| நீளம் - 148 அடி | அல்லது 98 2/3 முழம் |

மூன்றாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 102 அடி | அல்லது 68 முழம் |
| நீளம் - 136 அடி | அல்லது 90 2/3 முழம் |

நான்காம் வகை

| | |
|---|---|
| அகலம் -93 அடி | அல்லது 62முழம் |
| நீளம் - 124 அடி | அல்லது 82 2/3 முழம் |

ஐந்தாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 87 அடி | அல்லது 22 முழம் |
| நீளம் - 116 அடி | அல்லது 23 1/3 முழம் |

## ஆறாம் தர வீடுகள்

முதல் வகை

| | |
|---|---|
| அகலம் - 60 அடி | அல்லது 40 முழம் |
| நீளம் - 70அடி | அல்லது 46 2/3 முழம் |

இரண்டாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 54 அடி | அல்லது 36முழம் |
| நீளம் - 63 அடி | அல்லது 42 முழம் |

மூன்றாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 48அடி | அல்லது 32 முழம் |
| நீளம் - 56 அடி | அல்லது 32 2/3 முழம் |

நான்காம் வகை

| | |
|---|---|
| அகலம் -42 அடி | அல்லது 28முழம் |
| நீளம் - 49 அடி | அல்லது 32 2/3 முழம் |

ஐந்தாம் வகை

| | |
|---|---|
| அகலம் - 36 அடி | அல்லது 24 முழம் |
| நீளம் - 42 அடி | அல்லது 28 முழம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள் அறை ரேழி - கூடம் போன்றவைகளின் அளவுகள்**

உள் அறைகளும், கூடம் ரேழி போன்றவையும் பொதுவாகக் கீழ்க்கண்ட அளவுகளில் அமைவது அவசியம்.

முதல்தர வீட்டிற்குள் அமையும் பகுதிகள் - அதாவது அறை, கூடம், ரேழி போன்றவைகள் அகலத்தைக் காட்டிலும் நீளம் 1/4 பங்கு அதிகமாகவும்,

இரண்டாம் தர வீட்டிற்குள் அமையும் அறைகளின் அளவுகள் அகலத்தைக் காட்டிலும் நீளம் 3/8பங்கு அதிகமாகவும்

மூன்றாம் தர வீட்டிற்குள் அமையும் பகுதிகள் அகலத்தை விட நீளம் 1/16 பங்குஅதிகமாகவும் இருக்க வேண்டும் என்பது விதி.

**அறை ரேழி - கூடம் ஆகியவற்றிற்கு உகந்த அளவுகள்**

6, 8, 10, 11, 16, 17,20, 21, 26,27, 28, 29, 30, 31, 32, 35, 36, 37, 39, 41, 42, 43, 45, 52, 56, 60, 63, 64, 66, 68, 70, 71, 72, 73, 74, 77, 79, 80, 84, 85, 87, 88, 89, 91, 92, 95, 97, 99, 100, 101, 102, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 115, 116, 117, 119.

**வீடு கட்டும் மனை அல்லது ரேழி - கூடம் அளவுகளின் பலாபலன்கள்**

அகல அளவே முக்கியமானது, நீளத்திற்கு பலன் பார்க்க வேண்டாம்.

6 அடி: இறைவன் கிருபை உண்டாகி, மனைமாட்சி ஏற்படும், பொன்னும் பொருளும் போகமும் கூடும்.

7 அடி : வறுமை வாட்டும், பற்றாக்குறை மற்றும் தரித்திரம், தாண்டவமாடும், பிறரிடம் கையேந்தி வாழும் பேதமை உண்டாகும்.

8 அடி: செல்வம் செழிக்கும், தெய்வ கடாட்சம் கிட்டும், படிப்படியாக வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும், அதிகார அந்தஸ்து அமையும்.

9 அடி: துன்பம், தோல்விகளை தொடரும், மனைவியோடு மனமாச்சரியம் ஏற்படும், தரித்திரம் பீடிக்கும்.

10 அடி:ஊண், உடை, செல்வம் பெருகும், எதிர்பாராத பொருள் வரவுண்டாகும், இல்லை என்ற நிலையின்றி இனிமை கூடும்.

11 அடி: பால் பாக்கியம் பெருகும், எதிலும் எங்கும் வெற்றி கிட்டும், செல்வச் செழிப்பு உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 அடி: துர்மரணங்கள் சம்பவிக்கும், துன்பதுயரம் மிகும். ஏழ்மை வளரும், வறுமை கூத்தாடும், புத்திரர்களால் இழப்பு ஏற்படும்.

13 அடி: தோல்வியும் துயரமும் மிகும், நோய் வாட்டும், வருவாயில் வீழ்ச்சி உண்டாகும்.

14 அடி: அன்னியரால் இன்னல் கூடும், ஆபத்தும் அவலமும் ஆர்ப்பரிக்கும், இடையறாத கவலையால் ஏங்க நேரும்.

15 அடி: வறுமை வாட்டும், இல்லாமையும் எதிரிகளால் துன்பமும் உண்டாகும், மனக்கிலேசம் மிகும்.

16 அடி: பொருள் பெருகும், புகழ் மிகும், செல்வம் சேரும், சிறப்பு அதிகரிக்கும், மகிழ்ச்சி பொங்கும்.

17 அடி: வெற்றி உண்டாகும், எடுத்த செயல் ஈடேறும், தொழில் வருவாய் மிகும், எதிரிகள் வசப்படுவர்.

18 அடி: பொன் பொருள் அழியும், திருடர் பயம் மிகும் வீடு இடியும், வேதனை பெருகும்.

19 அடி: இல்லாமையால் தொல்லையுண்டாகும், புத்திரரால் நன்மை ஏற்படும், கவலையும் சோகமும் குடி கொள்ளும்.

20 அடி: சொகுசான வாழ்வுண்டாகும், பண்ணைத் தொழில் பலிதமாகும், வருமானம் விருத்தியாகும்.

21 அடி: எதிலும் எங்கும் வெற்றி கிடைக்கும், தொட்டதெல்லாம் பொன்னாகும், மகிழ்ச்சி உண்டாகும்.

22 அடி: வீண் பழி அகலும், எதிரிகள் இழிவடைவர், நாமார்க்கும் குடியெல்லாம் என்ற சுய உணர்வு பெருகும்.

23 அடி: உயர்வு தடைப்படும், உற்றார் பகை மிகும், துன்பமும் துயரமும் பெருகும், நிம்மதி அழியும்.

24 அடி: கையிருப்பு கரையும், கவலை மிகும், நோய் நொடியால் இயலாமை தோன்றும், உழைப்பிற்கேற்ற லாபம் கிடைக்காது, எதிலும் இழுபறி நிலையே இருந்து வரும்.

25 அடி: இல்வாழ்க்கையில் இடர்பாடு உண்டாகும், மனைவி வழியில் துன்பம் தோன்றும், மனைவியாலும் துன்பம் தோன்றும்.

26 அடி: பொன், பொருள் செழிக்கும், போக வாழ்வு மிகும், எந்நாளும் இன்பமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 அடி: உயர் பதவி கிடைக்கும், நல்லோர் உதவி கிட்டும், பாமரர் பாராட்டுவர், பெயரும் புகழும் கிட்டும்.

28 அடி: வெற்றி கிட்டும், வேதனை மறையும், துன்பம் நீங்கி இன்பம் பெருகும், அனைவரும் வசியமாவர், தெய்வ அருள் கிட்டும்.

29 அடி: உயர்வான வாழ்வு அமையும், பால் பாக்கியமும், பண்ணைத் தொழிலும் சிறக்கும்.

30 அடி: லட்சுமி கடாட்சம் கிட்டும், சந்தான பாக்கியத்திற்குக் குறைவிருக்காது, மூதாதையர் சொத்துக்கு அதிபராகலாம், யோகங்களுக்கும் குறைவிருக்காது.

31 அடி: யோக சித்தி கிட்டும், நல்லோர் சகவாசம் ஏற்படும், உயர்வும் புகழும் உண்டாகும்.

32 அடி: அனைவரையும் வசப்படுத்தும் ஆற்றல் உண்டாகும், யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பொது நோக்கு வளரும் இழந்தவைகளை மீட்டுக் கொள்ள முடியும்.

33 அடி: எல்லோரும் நல்லவரே என்று எண்ணத் தோன்றும்,வருவாயும் வாய்ப்புக்களும் அதிகரிக்கும், செல்வம் செல்வாக்கு மிகும்.

34 அடி: தீமைகள் கூடும், தகாத காரியங்களைச் செய்துவிட்டு ஊரை விட்டு, நாட்டை விட்டே ஓட வேண்டிவரும். முன்னோர் பெயரும் புகழும் அழியும்.

35 அடி: செல்வச் செழிப்புண்டாகும், செய்தொழிலில் வருவாய் மிகும். பாராட்டுக் கிட்டும்.

36 அடி: உயர்பதவி கிட்டும், உலகம் பாராட்டும் வீரதீரச் செயல்கள் மிகும்.

37 அடி: எடுத்த செயல் ஈடேறும், பால் பாக்கியமும் பண்ணைத் தொழிலும் விருத்தி அடையும்.

38 அடி: ஏழ்மையும், இன்னலும் ஏற்படும், இயலாமை வருத்தும், எதிலும் இழுபறி நிலையே காணப்படும்.

39 அடி: அந்தஸ்து அதிகரிக்கும், அமைதியான குடும்ப வாழ்வு அமையும் பொன், பொருள் சேரும் மக்களால் மதிப்பு உயரும்.

40 அடி: எதிர்ப்பும் இடர்பாடும் மிகும், எடுத்த செயல் தடைப்படும், எல்லாம் அரைகுறையாகவே முடியும்.

41 அடி: செல்வமும் புகழும் சேரும், தொழிலால் வருவாய் மிகும், வட்டி வணிகம் விருத்தியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42 அடி: இல்லை எனும் சொல்லே இல்லை எனலாம், வாழ்வில் சகல போகமும் கிட்டும், அன்பும் இன்பமும் கூத்தாடும், எதற்கும் பஞ்சமில்லை எனலாம்.

43 அடி: எதிலும் ஏமாற்றம், எங்கும் தடை என்ற நிலையே இருந்து வரும், எடுக்கும் ஒவ்வொரு அடியும் சறுக்கும்.

44 அடி: நோய்கள் நொந்ததனை செய்யும், கண்பார்வை மங்கும், கண்களையும் இழக்க நேரும், துயரமும் முன்பமும் வாட்டும், ஏக்கம் அதிகரிக்கும்.

45 அடி: பொருள் மிகும், புகழ் விரிவடையும், நன்மை தோன்றும்.

46 அடி: வறுமை வாட்டும், கிட்டவரும் வாய்ப்புக்கள் கூட எட்டிப் போகும், சாதனைகள் இல்லை, வேதனைகளே மிகும்.

47 அடி: சேமிப்புக்கள் சிதறிப் போகும், கடனும் கவலையும் மிகும்.

48 அடி: தீயாலும், தீயோராலும் தீங்குண்டாகும், வறுமையும் விபத்தும் வாட்டும்.

49 அடி: திருடர் பயம் உண்டாகும், அரசாங்க தண்டனையும், சமுதாயத்தில் மானக்கேடும் விளையும்.

50 அடி: தோல்வியும் பிறர் தொந்தரவும் அதிகரிக்கும், காரியத்தடை ஏற்படும்.

51 அடி: நீதிமன்றம் ஏறும் நிலை உண்டாகும். பிறரால் துன்பமும் தொல்லையும் சூழும்.

52 அடி: பொருள் மிகும், விவசாயம் விருத்தி அடையும், எடுத்த காரியங்கள் ஈடேறும்.

53 அடி: குற்றம் பார்த்து சுற்றத்தைப் பகைக்க நேரும், கொடுமைகள் குவியும்.

54 அடி: காவல் துறையால் தொல்லை நேரும், அரச தண்டனையையும் அபராதங்களையும் ஏற்க வேண்டி வரும்.

55 அடி: குற்றம் பார்த்து சுற்றத்தைப் பகைக்க நேரும், கொடுமைகள் குவியும்

56 அடி: வம்சம் செழிக்கும், பெருமையும் புகழும் கூடும், நன்மை ஓங்கும்.

57அடி: குடும்பத்தில் வெறுப்பும் வேதனையும் மிகும், வம்ச விருத்தி தடைப்படும்.

58அடி: துயரமும் துன்பமும் கூடும், எதிர்பாராத இழப்பு ஏற்படும்.

59அடி: தேடிய பொருள் தீது வழி விரயமாகும், வாட்டமும் ஏக்கமும்

60அடி: தொழில் மேன்மையும் திரவிய விருத்தியும் ஏற்படும், தொட்டதெல்லாம் துலங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61 அடி: பிறர் தலையீடு ஏற்படும், கலவரமும், கலக்கமும் மிகும், மன அமைதி குன்றும்.

62 அடி: வறுமையால் வாட்டமும் வருத்தமும் ஏற்படும்

63 அடி: பொன் பொருள் சேரும், புகழ் கூடும், அருளாளர் ஆதரவு மிகும், ஆனந்த வாழ்வு கிடைக்கும்.

64 அடி: அரசாங்க ஆதரவு மிகும், பரிசும் பட்டயமும் கிட்டும், பொன் பொருள் புகழ் கிடைக்கும், பூரண மகிழ்ச்சி உண்டாகும்.

65 அடி: இல்வாழ்வில் இன்னல் சூழும் கொண்டவள் குதர்க்கம் பேசுவாள்.

66 அடி: பொன், புகழ், நன்மக்கட் பேறு அனைத்தும் ஒருங்கே வந்து சேரும், மகிழ்ச்சியான சூழ்நிலை மனத்திற்கு அமைதியைத் தரும்.

67 அடி: திருடர் பயம் தோன்றும், தீய சக்திகள் ஆட்கொள்ளும், பேய் பிசாசு பயமுறுத்தும், வஞ்சகரால் சஞ்சலம் உண்டாகும்.

68 அடி: நினைத்த காரியம் நிறைவேறும், எதிர்பாராத பொருள் வரவுண்டாகும், அருளாளர் தொடர்பும் ஆன்மீகவாதிகள் ஆதரவும் ஏற்படும்.

69 அடி: பொருள் நாசமடையும், புகழ் வீழ்ச்சியுறும், தீயாலும் தீயோராலும் தீங்குண்டாகும்.

70 அடி: சென்ற இடமெல்லாம் சிறப்புண்டாகும், செல்வ நிலை உயரும், செய்யும் தொண்டுக்கு புகழ் வந்து சேரும்.

71 அடி: செல்வம் சேரும், செழிப்புக் கூடும், நல்லவர் உதவுவர், வல்லவர் பாராட்டுவர்.

72 அடி: உணவு, உடை, இல்லம், கல்வி, வருவாய் போன்ற அனைத்தும் அளவின்றிக் கிட்டும், ஆடம்பர வாழ்வு அமையும்.

73 அடி: வம்ச விருத்தி தடைப்படும், சுற்றத்தார் தேவைக்குச் செலவிட நேரும், பொருளும் புகழும் விரயமாகும்.

74 அடி: பரிசு, பட்டயம், பதவி தேடிவரும், பலரும் பாராட்டும் பாக்கியம் உண்டாகும், பொன், பொருள் சேரும்.

75 அடி: பொருள் பாழாகும், புகழ் வீழ்ச்சியுறும், அருளும் அன்பும் வற்றும், அல்லல் மேலோங்கும்.

76 அடி: பிறரால் கேடுகள் விளையும், உதவிகள் தடைப்படும், கொடியவர் பயமுறுத்தலுக்கும் ஆளாக நேரிடும்.

77 அடி: எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும், அத்தியாவசியத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகள் அனைத்தும் கிடைக்கும், செல்வமும் செழிப்பும் உண்டாகும்.

78 அடி: வம்ச விருத்திக்கு தீங்குண்டாகும், வளமான எதிர்காலம் கண்ணுக்குத் தெரியாது, இழிவும் இன்னலும் எதிர் கொண்டழைக்கும்.

79 அடி: பால் பாக்கியமுண்டு, பண்ணைத் தொழிலும் வளர்ச்சி அடையும், பலராலும் பாராட்டப்படுவர்.

80 அடி: பொன் பொருள் போகமும், புகழ் விருத்தியும் ஏற்படும், சுகபோக வாழ்வு சித்திக்கும், சொகுசு மங்கையர் உறவு கிட்டும்.

81 அடி: தீயோரால் ஆபத்தும், தீயால் விபத்தும் உண்டாகும், திரவிய நஷ்டம் ஏற்படும்.

82 அடி: இயற்கையால் இன்னல் உண்டாகும்.

83 அடி: சுகம் கெடும், தூய்மை குறையும், ஏழ்மையும் இன்னலும் சூழும்.

84 அடி: எதிர்பாராத உதவிகளால் ஏற்றம் உண்டாகும். வருவாய் வளர்ச்சியும் பதவி உயர்வும் கிட்டும்.

85 அடி: அரச பதவியும் ஆளுங்கட்சி உறவும் உண்டாகும், சொந்தத் தொழிலால் சோபிதம் ஏற்படும்.

86 அடி: ஆபத்தும் அல்லலும் மிகும், எதிர்ப்பும் இகழ்ச்சியும் அதிகரிக்கும், தொல்லை துயரங்கள் அல்லலைக் கூட்டும்.

87 அடி: பிரயாணங்களால் புகழ் கூடும், எதிர்பாராத உயர்வு ஏற்றத்தைத் தரும், விலங்குகளால் நலன்கள் மிகும்.

88 அடி: எதிர்பாராத பிரயாணங்கள் ஏற்படும், இறை அருள் கிட்டும், மன அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

89 அடி: செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருக்கும், வளம் உண்டாகும், முன்னேற்றத்திற்கான நல்ல வாய்ப்புக்கள் கிட்டும்.

90 அடி: செல்வம் செழிக்கும், சிறப்பு மிகும், அன்பும் ஆதரவும் வளரும்.

91 அடி: கல்வி மேம்பாடும் நல்லவர் நேசமும் கிட்டும், இறை அருளால் ஆதரவு பெருகும்.

92 அடி: அறக்கட்டளை நிறுவனங்களின் ஆதரவும் பரிசும் பட்டயமும் கிடைக்கும், அரசாலும் ஆளுங்கட்சியாலும் நன்மை உண்டாகும்.

93 அடி: பொலிஸார் தொந்தரவுகளுக்கு ஆளாக வேண்டிவரும், அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிய வேண்டிவரும்.

94 அடி: வறுமை வாட்டும், வளங்கள் சுருங்கும், அமைதி குலையும்.

95 அடி: பொருளும் புகழும் விருத்தி அடையும், செல்வந்தர் தொடர்பு உண்டாகும்.

96 அடி: சேமிப்பு வீணாகும், பொன் ஆபரணங்கள் சேதமாகும், திருடர்பயம் மிகும்.

97அடி: நீர் வழி நன்மை உண்டாகும், வணிகத்தால் பொருள் அடையும்.

98 அடி: சென்ற இடமெல்லாம் சிறப்புண்டாகும், கற்றோரும் கல்லாதாரும் நற்றுணையாவர், நன்மைபுரிவர்.

99 அடி: கற்றோரும், செல்வந்தரும் ஆதரிப்பர், அரசாலும் ஆளுங்கட்சியாலும் நன்மை உண்டாகும்.

100 அடி: இறைவன் திருவருள் கிடைக்கும், பொன் பொருள் போகம் உண்டாகும், சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

101 அடி: வரவு மிகும், சேமிப்பு வளரும், புகழும் பூரிப்பும் ஓங்கும், மகிழ்ச்சி நிலவும்.

102 அடி: "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனும் பரந்த நோக்கு பரிணமிக்கும், நன்மைகள் நாடி வரும், வசீகர சக்தி வளரும்.

103 அடி: கள்வர் பயமும் கயவர் உறவும் அல்லலைத் தரும், ஏமாற்றம், இழிவு ஏற்படும், நம்பிக்கை நாணயம் குறையும்.

104 அடி: வரவு மிகும், வல்லவர் துணை லாபத்தைத் தரும் உறவினரால் செலவுகள் கூடும். மன அமைதி குன்றும்.

105 அடி: குடும்ப வாழ்வில் குறைபாடு தோன்றும், மனைவியால் மகிழ்ச்சி குலையும், குடும்பத்தில் சண்டையும் சச்சரவுமாகக் காலம் கழியும்.

106 அடி: பொருள் வரவும் பூஷண சேர்க்கையும் உண்டாகும், அறிவும் ஆற்றலும் பெருகும், அருளாளர் நட்பு மிகும்.

107 அடி: ஈட்டிய பொருளை இழக்க நேரிடும், ஈனர் தொடர்பும் வறுமையும் தலை தூக்கும்.

108 அடி: மன அமைதி கிட்டும், ஆஸ்திகவாதிகளின் அன்பும் ஆதரவும் பெருகும், எதிர்பாராத நன்மைகள் வந்தடையும்.

109 அடி:தொட்டதெல்லாம் பொன்னாகும், எண்ணித் துணியும் இயல்பு மேலோங்கும், மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110அடி: பொன் பொருள், பூஷணம் சேரும், வரவு மிகும், வங்கியின் சேமிப்பு வளரும், உடல் நலம் நன்கு அமையும்.

111அடி: காரியங்கள் சித்தியாகும், சுபிட்சம் நிலவும் சுப நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

112 அடி: எண்ணியவை ஈடேறும், இன்னலும் இழிவும் அகலும், பொன்னும் பொருளும் கிட்டும்.

113 அடி: எதையும் எடுத்து தொடுத்து முடிக்கலாம், எதிர்பாராத வரவுகள் வந்து கொண்டே இருக்கும், சுகபோகம் சுடர்விடும்.

114 அடி: தொடர்ந்து பயணங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும், தொழில் வழியில் பல நகரங்களில் வாழும் நிர்ப்பந்தம் உண்டாகும், மொத்தத்தில் தேச சஞ்சாரியாகத் திகழ்வார்.

115 அடி: பணம் சேரும், பாக்கியம் மிகும், மகிழ்ச்சி தாண்டவமாடும், மன அமைதி உண்டாகும்.

116 அடி: வற்றாத செல்வமும் புகழும் வந்து சேரும், வாழ்வெல்லாம் சுகபோகத்தை துய்க்கும் வாய்ப்பு உண்டாகும்.

117 அடி: ஊர் சுற்றும் வணிகத்தால் லாபம், புத்தி தடுமாற்றம் உண்டாகும், ஏழ்மை குடி கொள்ளும்.

118 அடி: சொத்து அழியும், சுகம் கெடும், புத்தி தடுமாற்றம் உண்டாகும், ஏழ்மை குடி கொள்ளும்.

119 அடி: என்னொற்றான் கொல் இவன் தந்தை எனப் பலரும் பாராட்டும் பாக்கியம் கிட்டும், சுக போகங்கள் மிகும்.

120 அடி: அதற்கு மேலும் தோஷம் கிடையாது என்பது வல்லுநர் கருத்து.

மேற்குறிப்பிட்ட நன்மை தீமைகளை அறிந்து நாம் முன்னரே குறிப்பிட்ட அளவுகளிலேயே வீடு கட்ட வேண்டும். இவற்றில் அகலமோ அல்லது நீளமோ தோஷமற்ற அளவு உள்ளதாக அமைந்தாலும் போதும். சிறப்பாக அகலம் தோஷமற்ற அளவாக இருப்பது நன்று.

குறிப்பாக வீடுகளுக்குத் தாழ்வாரம் 5 அடி6 அங்குலத்திற்கும் மேல் அமைக்க வேண்டும். வீட்டின் அடி மட்டத்துக்குத் தாழ்வாரம் சற்றுத் தாழ்வாக இருப்பது சிறப்பு. வீடுகளில் அமைக்கும் கூடம், அறைகளுக்கும் 10, 16, 22, 29 அடி அகலமும் அதற்குச் சமமான நீளமும் வைப்பது சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிலும் பெரிது"* *- வள்ளுவர்*

# இதயத்திலிருந்து நன்றிகள்

எமது குடும்பத்தலைவன் இறையடியுற்ற வேளை ஓடிவந்து ஆறுதல் கூறி உங்கள் சொந்த வேலைகள் போல் அனைத்து உதவிகளையும் புரிந்த அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், வெளி நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பதாதைகளை வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் ஏனையோருக்கும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் இம்மலரினை அழகுற அச்சிட்டுக்கொடுத்த வேழன் பதிப்பகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப விருட்சம்

✵ வைரமுத்து + தில்லையம்மா ✵

✵ வல்லிபுரம் + சிவபாக்கியம்

✵ உதயகுமார் + நல்லமுத்து ✵

வேலாயுதம்பிள்ளை + சிவலோகநாயகி ✵

திருநாவுக்கரசு

✵ வல்லிபுரம் +

பொன்

செல்வராணி + குகதாஸ்

விஷ்ணுகரன்
+
வித்தியா

வைஷ்ணவி
நிதுஜன்
மகிஷா

✵ விஷ்ணுகாந்தன்

விஷ்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்லிபுரம் + சின்னம்மா ✱

பொன்னம்மா

✱ சின்னக்குட்டி + சின்னப்பிள்ளை ✱

தங்கமுத்து + தில்லையம்பலம் ✱

அன்னப்பிள்ளை + காசிநாதர் ✱

புண்ணியமூர்த்தி + செல்லம்மா ✱

✱ பொன்னம்மா + தவராசா

கந்தசாமி

சரஸ்வதி

✱ பரமேஸ்வரி + சின்னத்தம்பி

உருக்குமணிதேவி + சுப்பிரமணியம்


வேலும்பிள்ளை + மகேஸ்வரி

புஸ்பராணி + பரராசசிங்கம் ✱

சிவலோகநாதன் + சந்திரகாந்தி

விஷ்ணுகஜன் ✱

✱ அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org